
நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்

Blessed Is the One Who Fears the Lord

Album 27 Song 6 | ஆல்பம் 27 பாடல் 6





Song 6 நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்

Psalm 112 – Portrait of the blessed man who fears the Lord. He is gracious, compassionate, generous, and his family is strong. His righteousness endures forever.


நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
உன் வம்சம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படும்

பயப்படு பயப்படு கர்த்தருக்கே நீ பயந்திரு
பயப்படு பயப்படு அவர் ஒருவருக்கே என்றும் பயந்திரு

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
ஆஸ்தியும் ஐசுவரியமும் உன் வீட்டிலிருக்கும்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
உன்னுடைய நீதி என்றைக்கும் நிற்கும்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் இருளிலும் வெளிச்சம் உதிக்கும்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
நீ இரக்கமும் மன உருக்கமும் உள்ளவனாவாய்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் அயலானுக்கு இரங்கி கடன் கொடுப்பாய்



கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
நீ நியாயமானபடி நடந்து பாக்கியவானாவாய்


நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பாய்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
நித்திய கீர்த்திப்பெற்று நீதிமானாவாய்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
துர்செய்தியைக் கேட்டாலும் பயப்படமாட்டாய்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
உன் இருதயம் கர்த்தரை நம்பி திடனாவாய்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
ஏழைகளுக்கு வாரியிறைப்பாய்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
மகிமையாய் தேவன் உன்னை உயர்த்துவார்

துன்மார்க்கன் உன்னை கண்டு மனமடிந்து போவான்
தன்னுடைய பற்களைக் கடித்துக் கரைந்து போவான்
துன்மார்க்கனுடைய ஆசைகள் அழிந்து போய்விடும்
உன்னுடைய கொம்பையோ தேவன் உயர்த்துவார்

நீ கர்த்தருக்கு பயந்திருந்தால்
உன் சந்ததி பூமியில் பலத்திருக்கும்
கர்த்தரின் கட்டளைகளை கைக்கொண்டால்
உன் வம்சம் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படும்



பயப்படு பயப்படு கர்த்தருக்கே நீ பயந்திரு
பயப்படு பயப்படு அவர் ஒருவருக்கே என்றும் பயந்திரு

